## இடர்கால வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்

## கல்விப் பொதுத்தராதர உயர்தரம் - தமிழ் (72)

தரம் - 12 ஆசிரியை : திருமதி.R.ரேணுகா தேவி

வாரம் - 21 இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்

தவணை - 03

---

தேர்ச்சி : 7.0 மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியை செம்மையாக கையாளுவார்.

தேர்ச்சி மட்டம் : 7.3 சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து மொழியை செம்மையாக பயன்படுத்துவார்.

விடயம் : வினைச்சொல்

**சரியான விடையை தெரிவு செய்க.**

1) நின்றான்,கற்றான் என்ற வினைச்சொற்களின் காலம் காட்டும் இடைநிலை எது?
    1. ன்
    2. இன்
    3. இ
    4. ற்
    5. ட்

2) நேற்று வந்தவன் என்னிடம் எதுவும் பேசவில்லை. இங்கு பேசவில்லை என்பது?
    1. ஆகுபெயர்
    2. வினையாலணையும் பெயர்
    3. கூட்டுப்பெயர்
    4. முறைப்பெயர்
    5. தொழிற்பெயர்

3) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையை கொண்ட வாக்கியம்?
    1. அவர்கள் புத்தகம் வாங்கினர்
    2. நான் படித்தேன்
    3. புலவர் இயற்றினார்
    4. அவன் நடந்தான்
    5. அம்பு தொடுத்தான்

4) தற்கால வழக்கில் பெரிதும் பயன்படுத்தப்படும் வியங்கோள் வினைமுற்று விகுதி
    1. அட்டும்
    2. இய
    3. இயர்
    4. கள்
    5. அல்

5) பின்வருவனவற்றுள் விருப்பு ஏவல் வினையின் அமைப்பாக அமைவது
    1. வினையடி + பன்மைவிகுதி
    2. வினையடி + ஆத் + ஈர்
    3. வினையடி + ஆத் + ஈர்கள்
    4. வினையடி + கால இடைநிலை + மை
    5. வினையடி + கால இடைநிலை + அது

6) பின்வருவனவற்றுள் "அல்" எதிர்மறை வியங்கோள் வினையாக வந்த சொல்
    1. உண்ணல்
    2. உண்ணற்க
    3. வாரல்
    4. ஆடல்
    5. வாழ்க

7) பெயரடிகளை கொண்ட வினைகள்
    1. எழுதுவேன், இருப்பான்
    2. கதைத்தார், பயந்தேன்
    3. போன்றது, ஒப்பான்
    4. சான்றான், மாண்டது
    5. மகிழ்ந்தான், இன்புற்றான்

8) “ன்” இடைநிலை அமையப்பெற்ற சொல்

1. போனேன்
2. போயினேன்
3. போயினர்
4. போயின
5. போயினாய்

9) பின்வருவனற்றுள் பெயரெச்ச விகுதிகளை மட்டும் கொண்ட தொகுதி

1. அ,இ
2. அ,உம்
3. உம்,உ
4. உ,இ
5. இ,ய்

10) தெரிநிலை வினைமுற்றின் காலம் காட்டும் உறுப்பு

1. பகுதி
2. விகுதி
3. இடைநிலை
4. சந்தி
5. சாரியை

11) பின்வருவனவற்றுள் குறிப்பு வினையாக அமையும் சொல்

1. படிப்பான்
2. உண்பான்
3. கெட்டிக்காரன்
4. ஓடும்
5. வருவான்

12) பின்வருவனவற்றுள் பெயரெச்சமாகவும் வினைமுற்றாகவும் அமையும் சொல்

1. படித்த
2. ஓடும்
3. சிரித்த
4. எழுதிய
5. நடந்த